**RWDS RURAL WORKERS DEVELOPMENT SOCIETY**

Reg :93/2007

# ஆண்டறிக்கை



2022-2023


**19A, R.R.சேதுபதி நகர், இராமநாதபுரம் - 623501**

**தொடர்புக்கு:9443783341**

# பொருளடக்கம்


- இராமநாதபுரம் மாவட்டம் வரைபடம்
- தலைவர் உரை
- நிதி உதவி
- நிறுவனத் தகவல்
- நிறுவன அமைப்பு
- நிர்வாகக்குழு உறுப்பினர்கள்
- பணியாளர்கள்
- செயல் அறிக்கை
- வரவு - செலவு தணிக்கை அறிக்கை

இராமநாதபுரம் மாவட்ட வரைபடம்



<u>நன்றியுடன்.....</u>

2022-2023ம் நிதியாண்டிற்கான நமது 16ம் ஆண்டு அறிக்கையை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களின் மதிப்புமிக்க ஆதரவு மற்றும் பரிந்துரைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதற்கும், சுறுனுளு இலக்கு மற்றும் பணிகளை அடைவதில் கடின உழைப்பு மேற்கொள்ளும் அனைத்துப் பணியாளர்களுக்கு் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிக்க இந்த வாய்ப்பை பயன்படுத்துகிறேன். சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் பனைத்தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அவர்களின் தொழில் மேம்பாட்டிற்காகவும், நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்கிடும் பொருட்டு நமது நிறுவனத்தின் பணிகளை சிறப்பாக எடுத்து செல்கிறீர்கள். குழந்தைகளுக்கு ஆரோக்கியமான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கி அவர்களின் சிறப்பான வளர்ச்சிக்கு அடிகோலிய **Cry** நிறுவனத்திற்கு நன்றி கூற கடமைபட்டுள்ளேன்.

**இப்படிக்கு**
**D.R.**சந்திரன்
**தலைவர்**


# நிதி உதவி

குழந்தை உரிமைகளும் நீங்களும் (cry) அமைப்பு 40 ஆண்டுகளுக்கு மேலாக மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான குழந்தைப் பருவத்தை உருவாக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. நமது நிறுவனம் தொடங்கப்பட்ட 2007ம் ஆண்டு முதல் இன்று வரை நமது நிறுவனத்திற்கு நிதி உதவி செய்து வருகின்றனர். அவர்களது நிதியளிப்பின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை 10,000க்கும் மேற்பட்ட குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு உரிமைகளை உறுதி செய்து குழந்தைகள் இலக்கினை அடைய சிறப்பாக வழிகாட்டியுள்ளது. பள்ளிக்கல்வித்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புடன் இணைந்து 300க்கும் மேற்பட்ட குழந்தைத்தொழிலாளர்களை மீட்டெடுப்பு செய்து அவர்கள் வாழ்வில் மீண்டும் கல்வியை மலரச்செய்தும், 100க்கும் மேற்பட்ட குழந்தைத்திருமணங்களை தடுத்து நிறுத்தி அவர்களின் சிறப்பான எதிர்காலத்திற்கும் அடித்தளம் இட்டுள்ளது. மேலும் பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கவும் அவர்களின் தொழில்கள் சிறக்கவும் அவர்களுக்கு சிறந்த விழிப்புணர்வை CRY நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.


கடந்த 16 ஆண்டுகளாக நமது நிறுவனத்திற்கு நிதி உதவி, ஆலோசனை மற்றும் பயிற்சியளித்து நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் கட்டமைப்பை உருவாக்கி முறையான உறுதியான நிதி மற்றும் நிர்வாக திறன்களை செயல்படுத்த வழிகாட்டிய CRY நிறுவனத்திற்கு நமது நிறுவனத்தின் நிர்வாகக்குழு மற்றும் பணியாளர்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

| நிறுவனத் தகவல் | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மெண்ட் சொசைட்டி (RWDS) |
| பதிவு எண் | 93/2007 தமிழ்நாடு சங்க பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. |
| முகவரி | 19A, R.R.சேதுபதி நகர்,<br>இராமநாதபுரம் - 623501 |
| அலைபேசி / தொலைபேசி எண் | 9443783341 |
| முதன்மை நிர்வாகி | வெ.சௌந்திரமாலதி |
| வங்கியின் பெயர் | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. இராமநாதபுரம். |
| | தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, இராமநாதபுரம் |
| | கரூர் வைஷ்யா வங்கி, பாரதிநகர் கிளை |
| PAN எண் | AAAAR6899M |
| FCRA எண் | 075990100 |
| 12 AA பதிவு எண் | C.NO.101/179/CIT-II/2008-09 |
| 80 G பதிவு எண் | C.No.102/179/CIT-II/2008-09 |
| TAN பதிவு எண் | MRIR02580E |
| UNIQUE ID: | TN/2017/0165744 |

# நிறுவன அமைப்பு


மேலாண்மைக் குழு
இயக்குநர்
கணக்காளர்
ஒருங்கிணைப்பாளர்
ஆவணத்தொகுப்பாளர்
மேம்பாட்டுப்பணியாளர்கள்

## ORGANGRAM OF THE RURAL WORKERS DEVELOPMENT SOCIETY



# *நிர்வாகக்குழு உறுப்பினர்கள் விவரம்*

**திரு.தே.ராமச்சந்திரன் - தலைவர்**

சிறந்த நிர்வாகி மற்றும் சமூக செயல்பாட்டாளர், நிறுவனத்தை வளர்த்தெடுப்பதில் சிறந்த முன்னெடுப்புகளையும் வழிகாட்டுதல்களையும் மேற்கொள்கிறார்.

**திரு.பொ.சுப்பிரமணியன் - துணைத்தலைவர்.**

இவர் ஒரு பனைத்தொழிலாளர் மற்றும் சமூகஆர்வலர். பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளில் ஆர்வமுடன் செயலாற்றக்கூடியவர்.

**திருமதி.வெ.சௌந்திரமாலதி — செயலாளர்**

பனைத்தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். நிறுவனத்திற்கான புதிய திட்டங்கள் பெறுவதிலும், பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதிலும் முனைப்புடன் செயல்படுபவர். பெண்கள் மற்றும் குழந்தை உரிமைக்காக செயலாற்றுபவர்.

**திருமதி. ஞா.பசுபதி — பொருளாளர்**

பள்ளி ஆசிரியை, நிர்வாகத்தை சீரான முறையில் நேர்மையாக செயல்படுத்துவதில் வல்லவர். பொருளாதாரச் செயல்பாடுகளில் மிகுந்த கண்காணிப்புடனும் இலக்குடனும் செயலாற்றுபவர்.

**திரு.பா.கண்ணன் -செயற்குழு உறுப்பினர்**

சிறந்த சமூக ஆர்வலர். குழந்தைகள் தனித்திறன் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடுடையவர். கராத்தே கலையின் வாயிலாக ஆண், பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முனைப்புடன் செயல்படுபவர்.

**திருமதி.ந.ராஜமணி -செயற்குழு உறுப்பினர்**

சமூக ஆர்வலர். முதுநிலை சமூகப்பணி பட்டம் பெற்றவர். நிறுவன வளர்ச்சிக்கான ஆலோசனைகள் வழங்குபவர். நிறுவனத்தின் முன்னேற்றதிற்காக கால நேரம் பாராது உழைப்பவர்.

**திருமதி.பி. அந்தோணியம்மாள் - செயற்குழு உறுப்பினர்**

சமூக ஆர்வலர். முதுநிலை சமூகப்பணி பட்டம் பெற்றவர். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். குழந்தைகள் மற்றும் மக்களின் வளாச்சிக்கான திட்டங்களை வகுப்பதில் சிறமையானவர்

திருமதி. அ.பசீரா பர்வீன் – பொதுக்குழு உறுப்பினர்

இல்லத்தரசியான இவர் சமூகப்பணி செய்வதில் மிகுந்த ஈடுபாடு உடையவர். குழந்தைகளுக்கான திட்டங்கள் செயல்படுத்துவதில் ஆர்வம் உடையவர். இவர் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராவார்

**திரு. ம.பெருமாள் ___**
**பொதுக்குழு உறுப்பினர்**

ஓய்வு பெற்ற ஆசிரியர், சமூகப்பணியில் ஆர்வமுடையவர். குழந்தைகளின் அறிவியல் சிந்தனைகளை வளர்ப்பதில் திறமையானவர். நிறுவனத்தின் வளர்ச்சிக்காக ஆலோசனைகளை வழங்குபவர்

**திரு. ம..காளிமுத்து ___**
**பொதுக்குழு உறுப்பினர்**

இல்லத்தரசியான இவர் சமூகப்பணி மற்றும் பனைத்தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பெறுவதில் முனைப்புடன் செயலாற்றுபவர்.

**திரு. ரா.காளிமுத்து**

**பொதுக்குழு உறுப்பினர்**

பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கான மருத்துவர் மற்றும் சமூக ஆர்வலரான இவர் மக்களின் நல்வாழ்க்கைக்கான விழிப்புணர்வு [illegible]

# பணியாளர்கள்

**திரு. சா.சாத்தையா - இயக்குநர்**

35 ஆண்டுகளாக பனைத்தொழிலாளர்கள் ஒருங்கிணைப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார். சிறந்த நிர்வாகி மற்றும் சமூக செயல்பாட்டாளர். பிற அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுடன் பணி மற்றும் கொள்கை ரீதியாக இணைந்து செயல்படுவபர். காலம் தவறாமலும் நேர்மையாகவும் செயலாற்றுபவர். பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றக்கூடியவர்

**திருமதி. து.கனவள்ளி - திட்ட ஒருங்கிணைப்பாளர்**

20 ஆண்டுகளாக பனைத்தொழிலாளர்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுப்பணியில் ஈடுபட்டு வருகிறார். பணியாளர்களிடம் கண்டிப்பும் கனிவும் மிக்க ஒருங்கிணைப்பாளர் மற்றும் அனுபவமிக்க பயிற்சியாளர். பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைக்காக பாடுபடுபவர் மிகச்சிறந்த களப்பணியாளர்.

**திருமதி.கா.பாக்கியலெட்சுமி - வட்டார ஒருங்கிணைப்பாளர்.**

15 ஆண்டுகளாக RWDS நிறுவனத்தில் கள ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவர் குழந்தைகள் மத்தியில் எளிமையாகவும், குழந்தைகளை ஈர்க்கும் விதத்திலும் பணிசெய்யக்கூடியவர்.

**திருமதி.ம. மரிய ஸ்டெல்லா - வட்டார ஒருங்கிணைப்பாளர்.**

15 ஆண்டுகளாக RWDS நிறுவனத்தில் கள ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். குழந்தைத்தொழிலாளர்களை மீட்டெடுப்பதில் முழு ஈடுபாட்டுடனும், ஆர்வத்துடனும் பணி செய்பவர்.

**திருமதி. கா.நிர்மலா - கணக்காளர்**

13 வருடங்களில் 6 வருடங்கள் கள ஒருங்கிணைப்புப் பணியிலும், 7 வருடங்களாக கணக்காளராக பணி செய்து வருகின்றார். விரைவாக கற்றுக்கொள்ளும் திறன் மற்றும் ஆவணப்பராமரிப்பில் சிறப்பாக செயலாற்றக்கூடியவர்

**திருமதி.சே.காமாட்சி -**
**வட்டார ஒருங்கிணைப்பாளர்.**

10 ஆண்டுகளாக RWDS நிறுவனத்தில் கள ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். மேற்கொண்ட பணிகளில் முழு ஆர்வத்துடன் விரைந்து செயல்படுபவர்.

**திருமதி.ஆ. புனிதா -**
**வட்டார ஒருங்கிணைப்பாளர்.**

10 ஆண்டுகளாக RWDS நிறுவனத்தில் கள ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். குழந்தைகள் மத்தியில் பொறுமையுடனும், சிந்தித்து செயலல்படக்கூடியவர்

**திருமதி. சி.சத்யா-**
**வட்டார ஒருங்கிணைப்பாளர்.**

10 ஆண்டுகளாக RWDS நிறுவனத்தில் கள ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். நேர்மறை சிந்தனை, மக்களை ஒருங்கிணைப்பதில் சிறப்பான செயல்திறன் உடையவர்.

**திருமதி. ச.ராஜாத்தி- வட்டார ஒருங்கிணைப்பாளர்.**

9 ஆண்டுகளாக RWDS நிறுவனத்தில் கள ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். குழந்தைகளின் வளர்ச்சியில் விடாமுயற்சியுடனும் ஆர்வத்துடன் பணி செய்யக்கூடியவர்

**செல்வி. மு.அன்மிதா - அறிக்கை மற்றும் ஆவணத்தொகுப்பாளர்**

9 மாதங்களாக RWDS நிறுவனத்தில் அறிக்கை தயாரிப்பு மற்றும் இணையத்தளப்பணிகளில் சிறப்பாக பணியாற்றினார்.

# ஆண்டறிக்கை 2022 —— 2023

**முகவுரை**

ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி நிறுவனம் 2007ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர் குழுவினால் துவக்கப்பட்டது. இக்குழுவானது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒடுக்கப்பட்ட பனைத்தொழிலாளர் மக்களின் மேம்பாட்டுக்காக பணி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இது தமிழ்நாடு சங்கப்பதிவுகள் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: 93.'.2007. இதன் தலைமையகம் இராமநாதபுரத்தில் உள்ளது. இந்நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் கிராமப்புற ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் குறிப்பாக பனைத்தொழிலார்கள் மத்தியில் பணி செய்து வருகிறது.

**பணித்தளம்:**

மாநிலம்: தமிழ்நாடு

மாவட்டம்: இராமநாதபுரம்.

ஒன்றியங்கள்: இராமநாதபுரம், கடலாடி, திருப்புல்லானி, மண்டபம், பரமக்குடி, போகலூர், திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம், முதுகுளத்தூர், கமுதி மற்றும் நைனார்கோவில்.

**தொலைநோக்குப் பார்வை :**

தமிழகத்தில் பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை சமூக, பொருளாதார ரீதியில் மேம்பாடு அடையச் செய்வதாகும்

**இலட்சியம் :**

- ஜாதி, மதம், இனம், அரசியல் இவைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து பனைத்தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து வாழ்வாதார மேம்பாடடிற்காக பாடுபடுதல்
- தங்களின் தற்போதைய நிலையை உணர்ந்து மேம்பட்ட நிலையை அடைய தேவையான அனைத்து திட்டங்களையும் வகுத்து வளர்ச்சித் திட்டங்களில் அவர்களையும் பங்கேற்க வைத்தல்.
- பனைத்தொழிலாளர்களை அரசு மற்றும் இதர துறைகளுடன் இணைத்து விடுதல்.
- இக்கால குழந்தைகள் வரும் காலத்தில் மாண்புடனும் நலமுடனும் வாழ குழந்தை உரிமைகளை நிலைநிறுத்துதல்
- மேற்கண்ட நோக்கங்களை அடைய ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி (சுறுனுளு) கீழக்கண்ட அணுகுமுறைகளில் பணிசெய்கிறது.
- பனைத்தொழிலாளர்களை ஒன்று திரட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- கிராமம், வட்டார, மாவட்ட சங்கங்களை உருவாக்குதல் மற்றும் தொடர்ந்து செயல்படத் தூண்டுதல்
- பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் உரிமைகளை வென்றெடுக்க இணைந்த செயல்பாடுகள் முன்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள எளிதமைத்து கொடுத்தல்.

**பணித்தள அறிமுகம்:**

இராமநாதபுரம் மாவட்டம் தென்தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இது 4232ச.கி.மீ பரப்பளவு கொண்டது. இதன் மக்கள் தொகை 12,58,772. இது 11 வளர்ச்சி ஒன்றியங்களாகவும் 7 தாலுகாக்களாவும் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வறுமை, வறட்சி ஆகியவற்றால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இம்மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் 28மூ மும் குழந்தைகள் 27.2மூ மும் உள்ளனர்.

எங்களின் பணித்தள கிராமங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளை உள்ளடக்கியது. குடிதண்ணீர் என்பது மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. பெண்கள் குடிதண்ணீருக்காக பல மைல் தூரம் கால்நடையாக நடந்து தலையில் சுமந்து வருகின்றனர். முக்கியமாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கல்வி சுகாதாரம் போன்றவை எட்டாக்கனியாகவே உள்ளன. அரசு இப்பிரச்சனையில் உரிய முனைப்பு காட்டுவதில்லை. மேலும் இராமநாதபுரம் மாவட்டம் சமூக பொருளாதார அளவில் ஒரு பின்தங்கிய பகுதியாக உள்ளது.

| பணி செய்யும் பகுதிகள்: | | |
|---|---|---|
| | மாவட்டம் | - 1 |
| | ஒன்றியம் | - 9 |
| | கிராமங்கள் | - 110 |
| | பஞ்சாயத்து | - 75 |

<u>செயல்பாட்டு அறிக்கை</u>

# 1. பனைத்தொழிலாளர்களுக்கான செயல்பாடுகள்

## 1. கிளைச்சங்கம் மற்றும் வட்டார சங்கங்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம், திருப்புல்லாணி மற்றும் கடலாடி ஒன்றியங்களிலுள்ள பனைத்தொழிலாளர்களை கிராம கிளைச்சங்கங்கள் மற்றும் வட்டாரச் சங்கங்களாக ஒருங்கிணைத்து, மாதாந்திரக் கூடுகைகள் நடத்தப்படுகின்றன. இக்கூடுகைகளில் பனைத்தொழிலாளர்களை சங்க உறுப்பினர்களாக இணைத்தல் மற்றும் நலவாரியத்தில் இணைத்து அவர்களுக்கான அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

மேலும் பனைத்தொழிலாளர் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை, பெண்களுக்கான திருமணம், மகப்பேறு உதவி மற்றும் பெரியவர்களுக்கான முதியோர் உதவித்தொகை போன்ற நல உதவிகள் சங்கம் வாயிலாக உறுப்பினர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

கிளைச்சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கிராமங்களிலுள்ள குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரக கண்காணிப்புச் செயல்பாடுகளிலும் சிறப்பான முன்னெடுப்புச் செய்கின்றனர். அவற்றுள் சில பின்வருமாறு.

- 100 சதவீதம் குழந்தைகள் பள்ளி சேர்ப்பு
- குழந்தைத் தொழிலாளர் மீட்பு மற்றும் பள்ளி மறு சேர்ப்பு
- குழந்தைத்திருமணம் முன்தடுப்பு
- அரசுப்பள்ளி தக்கவைப்பு

**2022-2023ம்** நிதியாண்டில் 110 கிளைச்சங்கங்கங்களில் கூடுகைகள் நடத்தப்பட்டு, **459** உறுப்பினர்களுக்கு நலவாரியத்திலிருந்து **ரூ.1092000/-** நல உதவித்தொகையாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது

2008 ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டு வரை ரூ.11956500/- பனைத்தொழிலாளர்களுக்கு அரசிடமிருந்து நலஉதவியாகப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

22 குழந்தைத் தொழிலாளர்களை வேலையிருந்து மீட்டு மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளது.

# 2. குழந்தைகளுக்கான செயல்பாடுகள்

## 1. சிறுவர் மன்றக் கூடுகைகள்

குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யவும், அவர்களுக்கு சமூகம் சார்ந்த கல்வியை கற்றுக்கொடுக்கவும் 52 கிராமங்களிலும் 52 சிறுவர் மன்றக் கூட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு சிறுவர் மன்றங்களிலும் அக்கிராமத்தில் உள்ள 10 முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் உறுப்பினர்களாக உள்ளனர். மாதம் இருமுறை கூடும் இம்மன்றத்தில் குழந்தைகள் தங்களின் பள்ளி அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர். தங்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றி விவாதிக்கின்றனர். மேலும் குழுவாக இணைத்து குழந்தைகளுக்கான புத்தகங்களை வாசித்தல் மற்றும் அதன் கருத்துக்களை விவாதித்தல் ஆகியன நடைபெறுகின்றது. குழுவாக இணைந்து பாரம்பரிய கிராம விளையாட்டுக்களை விளையாடுதல் பொது விசயங்கள் குறித்து பேசுதல் ஆகியனவும் நடைபெறுகின்றது. இந்த வருடம் 343+ 801=1144 குழந்தைகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**விளையாட்டு பங்கேற்புகள்**

மேதலோடை சிறுவர்மன்றம் வாயிலாக 7 குழந்தைகள் கராத்தேப் போட்டியில் கலந்து கொண்டு முதல், இரண்டாம் மற்றும் சிறப்பு இடங்களுக்கான பரிசுகளை பெற்றுள்ளனர்.

## 2. வளரிளம் பெண் குழந்தைகளுக்கான கூடுகைகள்

பனைத்தொழிலாளர் கிராமங்களில் உள்ள 11 வயது முதல் 18 வயது வரை உள்ள பெண் குழந்தைகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடைபெற்று வருகின்றன. வளரிளம் குழந்தைகளுக்கான மனம் மற்றும் உடலியல் சார்ந்த கல்வி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வயது வந்த பெண் குழந்தைகளுக்கான தன்சுத்தம பேணுதல், ஹார்மோன் சுரப்பிகள், உடலியல் மற்றும் மனோவியல் மாற்றங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன

வளரிளம் வயதில் தான் குழந்தைகள் கல்வியை இடைநிறுத்தம் செய்து தொழிலாளர்களாக மாறுகின்றனர். எனவே அவர்கள் கல்வியை தெடார்ந்து கற்பதற்கும், குழந்தைகள் வேலைக்கு செல்வதில் உள்ள சிரமம் மற்றும் ஆபத்துகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன். தன் சுத்தம் பேணுதல், மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு 850 குழந்தைகள் பங்கேற்புடன் 22 வளரிளம் குழுக்கள் அமைக்கப்பட்டு 198 கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளது.

## 3. மாலை நேரக்கல்வி

குழந்தைகளுக்கு பாடசம்மந்தமான சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும், தமிழ் கணக்கு மற்றும் ஆங்கிலப் பாடங்களை புரிந்துகொண்டு எளிமையாக கையாள ஏதுவாக நமது பணித்தளங்களில் உள்ள 6 (கன்னிகாபுரி, மாணிக்கநகர், வேலாயுதபுரம், அலைகாத்தவலசை, மருதந்தோப்பு மற்றும் அய்யனார்புரம்) கிராமங்களில் 1ஆம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாலை நேரக்கல்வி வகுப்பு நடத்துவதற்காக இக்கிராமங்களிலுள்ள தன்னார்வலர்களின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இந்தாண்டு **132+173=305** குழந்தைகள் இதன் வாயிலாக பயனடைந்துள்ளனர்.

6 கிராமங்களில் உள்ள மாலைநேரக்கல்வி மையங்களில் பயின்ற 305 குழந்தைகளும் 100மூ தேர்ச்சி பெற்றுள்ளனர்

## 4. வாழ்க்கைத்திறன் கல்வி

சிறுவர் மன்றங்களில் சிறப்பு பயிற்சியாக குழந்தைகள் மையத் தொகுதி (Child centre modules) - வாழ்க்கைக் கல்வி - சுய பொறுப்புணர்வு, சுய அடையாளம், முடிவெடுக்கும் திறன்களை வளர்த்தல், குழந்தைகள் பங்கேற்பு, ஆக்கப்பூர்வமான பகுப்பாய்வு மற்றும் அறிவியல் பூர்வமான கலந்துரையாடல்கள், குழந்தைகளின் வளர்ச்சி நிலைகள், பாலின பிரச்சினைகள் குறித்தான விழிப்புணர்வு, அறிவியல் சிந்தனைகள், குழந்தைகளை பாதிக்கும் காரணிகள் மற்றும் உளவியல் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது.

குழந்தைகள் தங்கள் இலக்கை நிர்ணயிப்பதிலும், உயர்கல்விக்கான பாடங்களை தேர்வு செய்வதிலும் சுய

## 5. குழந்தைகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள்

❖ **BRIDGE பள்ளி நிகழ்வுகள்**

கடந்த இரண்டு ஆண்டுகளாக 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள குழந்தைகள் அனைத்து பாடங்களிலும் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும், தமிழ் கணக்கு மற்றும் ஆங்கிலப் பாடங்களை புரிந்துகொண்டு எளிமையாக கையாள ஏதுவாக நமது பணித்தளங்களில் உள்ள கடலாடி பகுதியில் 9 கிராமங்களிலும் திருப்புல்லாணி பகுதியில் 3 கிராமங்களிலும் மண்டபம் பகுதியில் 3 கிராமங்களிலும் 15 கிராமங்களை உள்ளடக்கி CRYயிலிருந்து 2021 ஆகஸ்ட் மாதம் முதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பெரியநாயகிபுரம், பூப்பாண்டியபுரம், காவாகுளம், புல்லந்தை, கோரவள்ளி ஆகிய 5

பிரிட்ஜ் கல்விக்கான வாய்ப்பைப் பெற்று மாலை நேரங்களில் கணக்கு பாடங்களில் அடிப்படைக் கணக்குகளையும், மற்றும் ஆங்கிலப் பாடங்களில் உச்சரிக்கும் முறைகளையும் பிரிட்ஜ் பள்ளி ஆசிரியர்களுக்கு 5 TAB களையும் கொடுத்து திக்ஷா APP மூலமாக குழந்தைகளுக்கு எளிமையாக கற்றுக்கொடுக்கப்படுகின்றது.

குழந்தைகளின் தனித்திறமைகளை வெளிக்கொண்டுவரும் விதமாக திருப்புல்லாணி மற்றும் கடலாடி ஒன்றியங்களில் உள்ள 4 **BRIDGE** மைங்களில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் திருக்குறள் ஒப்புவித்தல், கைவேலைப்பாடுகள், சிலம்பம், அறிவியல் செயல்முறைகள், பாரம்பரிய விளையாட்டுகள் குறித்தான நாடகம் போன்றவை குழந்தைகளால் நடத்தப்பட்டது.

17-9-2022 இராமநாதபுரம், டி.பிளாக், லெட்சுமி தங்கம் மஹாலில் குழந்தைகளுக்கான தளித்திறன் மேம்பாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் குழந்தைகளுக்கான அமைப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து குழு விவாதம் நடைபெற்றது. குழந்தைத்தொழிலாளர் முறை ஒழிப்புக் குறித்தான நாடகம்.

## ❖ வளரிளம் பெண்களுக்கான வள ஆதார மையம் (CARC)

கடலாடி ஒன்றியத்தில் உள்ள பூப்பாண்டியபுரம் கிராமத்தில் குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான வள மையம் செயல்பட்டு வருகின்றது. இதன்வாயிலாக குழந்தைகளுக்கான கல்வி சம்பந்தமான சந்தேகங்களை தீர்க்கவும், கணிதம், ஆங்கிலம் மற்றும் பிற பாடங்கள் குறித்து குழந்தைகளுக்கு எளிமையாக வழிகாட்டவும் இந்த மையம் உதவி புரிகிறது. மேலும் குழந்தைகளை, உயர்கல்விக்கான தகுதித்தேர்வு மற்றும் அரசுப்பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்தவும், அவர்களுக்கு வழிகாட்டவும் செய்கிறது.

கேரம், சதுரங்கம் போன்ற உள்ளரங்க விளையாட்டு மற்றும் கால்பந்து, வளைப்பந்து போன்ற வெளியரங்க விளையாட்டு உபகரணங்களையும் குழந்தைகளுக்கு வழங்கி பயிற்சியளிக்கின்றது. மையத்திற்கு வரும் ஆண், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்புக்கலையாக சிலம்பம் பயிற்சியளிக்கப்பட்டு, போட்டிகளிலும் பங்கெடுப்பு செய்து வருகின்றனர்.

பூப்பாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆ. திருமணிச்செல்வம், சி. பிரவீன், ரா.ஹரிஷ் மற்றும் சந்துரு மற்றும் பெரியநாயகிபுரத்தைச் சேர்ந்த 1 பெண்குழந்தை மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்.

பூப்பாண்டியபுரம் கிராமத்தில் தேர்வில் தேர்ச்சி பெறாத, படிப்பில் பின்தங்கிய குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் கொடுத்து கல்வியை எளிமையாக்கி தேர்ச்சி பெற வைத்துள்ளனர்

## 6. கல்வி மற்றும் சுகாதார செயல்பாடுகள்

குழந்தைகளின் வளர்ச்சிக்கான தேவைகளில் கல்வி மற்றும் சுகாதாரம் முக்கியமான காரணியாக உள்ளது. இதனடிப்படையில் பள்ளிகளில் குழந்தைகளுக்கான வகுப்பறை, கழிப்பறை, பாதுகாப்பான குடிநீர், பாடவாரியாக ஆசிரியர்கள் போன்றவை கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு 52 கிராமங்களிலுள்ள பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வழிகாட்டுதல்.

cry மற்றும் சன் நெட்வொர்க் நிதி உதவியுடன் கடலாடி ஒன்றியத்திலுள்ள 11 அரசுப்பள்ளிகளில் பெண் மற்றும் ஆண் குழந்தைகளுக்கான சுகாதார வளாகங்கள் புதுப்பிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

cry மற்றும் சன் நெட்வொர்க் நிதி உதவியுடன் மண்டபம், திருப்புல்லாணி மற்றும் கடலாடி ஒன்றியங்களிலுள்ள 22 அரசுப்பள்ளிகளுக்கு கிருமி நாசினி, நாப்கின் எரியூட்டி உள்ளிட்ட சுகாதார பயன்பாட்டு பொருட்கள் வழங்கப்பட்டன.

# சிறப்பு நிகழ்வுகள்

- **குழந்தைகள் தினவிழா**

மண்டபம், திருப்புல்லாணி மற்றும் கடலாடி ஒன்றியங்களிலுள்ள கோரவள்ளி, குத்துக்கல்வலசை, மேலக்கிடாரம் கிராமங்களில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில் 450 குழந்தைகள் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். குழந்தைகளும் தங்களது எதிர்கால இலக்குகள் குறித்தான கருத்துக்களை கட்டுரை, மற்றும் ஓவியம் வாயிலாக தெரிவித்துள்ளார்கள். இவ்விழாவில் BDO, CDBO, DCPO, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பனைத் தொழிலாளர்கள் சங்கப் பொறுப்பாளர்கள், பெற்றோர்கள் என 500 க்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டனர்.

- **தேசிய பெண் குழந்தைகள் தினவிழா**

பெண் குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யவும், குழந்தைகள் தாங்கள் பங்கேற்பை விளையாட்டுக்கள் மற்றும் கல்விகளிலும், தாங்கள் இலக்குகளையுடைய அவர்களின் விடாமுயற்சியினால் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். அவர்களைப் பாராட்டும் விதமாக அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் நோக்கத்தில் கடலாடி மற்றும் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தேசிய பெண் குழந்தைகள் தினவிழாவன்று நாம் பணி செய்து வருகின்ற கிராமங்களிலுள்ள சாதனைப் பெண்களைப் பாராட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், அலுவலர்கள், CDPO, குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும்

RWDS பணியாளர்கள் கலந்துகொண்டு சாதனைப் பெண்களைப் பாராட்டி சிறப்பித்தார்கள்.

## ❖ கிராம சபைக் கூட்டங்கள் பங்கேற்பு

ஜனவரி 26, ஏப்ரல் 24, மே 1, ஜீலை 22, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 ஆகிய தினங்களில் ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபைக்கூட்டங்களில் சங்க உறுப்பினர்கள் மற்றும் நமது பணியாளர்கள் கலந்து கொண்டு பள்ளிகளில் அடிப்படை வசதிகள், சாலை மற்றும் தண்ணீர் போன்ற கிராமங்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்தும் குழந்தைகளுக்கான வளர்ச்சி, பாதுகாப்பு குறித்தான உரிமைகளை உறுதிப்படுத்துவும் தீர்மானம் இயற்றுகின்றனர்.

இதன் வாயிலாக சென்ற ஆண்டில் 15 கிராமங்கள் 100% குழந்தைத்தொழிலாளர் இல்லாத கிராமமாக மாற்றப்பட்டுள்ளது. 51 கிராமங்கள் குழந்தைத்திருமணம் நடைபெறாத கிராமங்களாக மாற்றப்பட்டுள்ளது.

- வண்ணாங்குண்டு முக்கிய சாலை முதல் அய்யனார்கோவில் வரை 1.5 கி.மீ சாலை மேம்படுத்தப்பட்டுள்ளது.

## ❖ மனிதக்கடத்தலுக்கு எதிரான உலக தினம்

உலக அளவிலான மனித்கடத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கடலாடி, திருப்புல்லாணி மற்றும் மண்டபம் ஒன்றியங்களில் உள்ள 5 ஊராட்சிகள், 12 உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் பேரணி நடைபெற்றது. இதில் ஊராட்சித்தலைவர்கள், உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பள்ளிக்குழந்தைகள், கிராமப்பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர்.

## ❖ முத்தரப்புக்கூடுகை

முத்தரப்புக் கூட்டம் 27-10-2022ல் கடலாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பூப்பாண்டியபுரம் கிராமத்திலுள்ள பள்ளி வளாகத்தில் கடலாடி வட்டாரக் வல்வி அலுவலர் அவர்கள் தலைமையிலும், RWDS தலைவர் திரு.தே.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலும், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் இடம்பெயர்ந்த இடங்களிலிருந்து

வந்திருந்த பெற்றோர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு இடம்பெயர்ந்த இடங்களில் உள்ள குழந்தைகள் 20கி.மீ முதல் 30 கி.மீ தூரமுள்ள தங்கள் சொந்த கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று வருவதற்கு ஏதுவாக இடம்பெயர்ந்த இடங்களில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

## ❖ தாய்ப்பால் வார விழா

ஆகஸ்ட் 1 முதல் 8 வரை அங்கன்வாடி மையங்களுடன் இணைந்து தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்து கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இதில் பயறு வகைகள், சிறுதானியங்கள், உலர் பழங்கள், விதைகள் போன்றவைகளை வழங்கி பயிற்சியளிக்கப்பட்டது. இதில் அங்கன்வாடிப்பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கினர்.

## ❖ குழந்தைத்தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்

கடலாடி ஒன்றியத்திலுள்ள சாயல்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில்- 14-06-2022 அன்று குழந்தைத்தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் பேரணி மற்றும் கருதத்தரங்கம் நடைபெற்றது. இதில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலர் திரு.சத்திய நாராயணன், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் திருமதி.வசந்தா, குழந்தைகள் நலக்குழுமம் உறுப்பினர் திரு. ராமமூர்த்தி, சைல்டு லைன் ஒருங்கிணைப்பாளர் திரு. முகம்மது நசூரப், சாயல்குடி பேரூராட்சித்தலைவர் திரு.அனிபா அண்ணா ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகள் வேலைக்குச் செல்வது சட்டவிரோதமான செயல் என்பதை உதாரணங்களுடன் விளக்கினார்கள். இதில் 500 க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## ❖ ஆசிரியர் தினவிழா கொண்டாட்டம்

செப்டம்பர் 5 ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 5 பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள், குழந்தைகள் மற்றும் RWDS பணியாளர்கள் இணைந்து அந்தந்த பள்ளிகளில் உள்ள வளாகங்களில்